








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 28 9.07.2025



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய முத்துக்கள் உபதேசங்கள்



# முத்துக்கள்

**ஸ்ரிய: பதியான நாராயணன்**

1. ஸ்ரிய: பதியான நாராயணன் படைப்பவன்
ப்ரஹ்மருத்ராதிகள் படைக்கப்படுபவர்கள்

2.ஸ்ரி: பதியான நாராயணன் அர்ச்சிக்கப்படுபவன்
ப்ரஹ்ம ருத்ராதிகள் அர்ச்சிக்கின்றவர்கள்

3. ஸ்ரிய பதியான நாராயணன் வணங்கப்படுபவன்;
ப்ரஹ்ம ருத்ராதிகள் வணங்குகின்றவர்கள்

4. ஸ்ரிய: பதியான நாராயணன் ஸ்தாநம் (பதவி) தருபவன் ப்ரஹ்ம ருத்ராதிகள் இவனிடமிருந்து ஸ்தாநம் (பதவி) பெறுபவர்கள்.

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++
++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## மோக்ஷத்தை விரும்புபவர்கள் உபாஸிக்கும் பெருமை எம்பெருமானுக்கே

மோக்ஷத்தை விரும்புபவர்கள் ஸ்ரிய:பதியான எம்பெருமானைத் தான் உபாஸிக்க வேண்டும், மற்றைய எந்தத் தேவதையை உபாஸித்தாலும் அதனால் மோக்ஷம் கிடைக்கவே கிடைக்காது. ப்ரஹ்ம ருத்ராதிகளான மற்றைய தேவதைகளும் தங்களுக்கு மோக்ஷம் வேண்டியிருந்தால் ஸ்ரீமந் நாராயணனைத்தான் உபாஸித்து மோக்ஷம் பெறுகிறார்கள்.

உபநிஷத்தில் யாரை உபாஸிக்கவேண்டும்? **कश्च ध्येयः** என்று ஒரு கேள்வியை கேட்டுக் கொண்டு ஜகத்திற்கெல்லாம் காரணமாயிருப்பவனை உபாஸிக்க வேண்டும். **कारणं तु ध्येयः** என்று ஸ்பஷ்டமாகப் பதில் கூறியுள்ளது. உலகிற்கெல்லாம் காரணம் யார்? என்றால் ஸ்ரிய: பதியான எம்பெருமான்தான் ஜகத்காரணம் என்றும் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

ஸம்ஸார ஸமுத்ரத்தில் மூழ்கி சப்தம் முதலான விஷயங்களால் ஆக்ரமிக்கப்பட்ட மனம் உடையவர்களுக்கு விஷ்ணுவாகிற ஓடம் ஒன்றே கரை கடப்பதற்குச் சிறந்த உபாயமாக உள்ளது. அதாவது ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டு மோக்ஷம் பெறுவதற்கு விஷ்ணு ஒருவன் தான் உபாயம். வேறு ஒரு உபாயம் கிடையாது. பகவான் விஷ்ணு ஒருவன் தான் மோக்ஷம் தர வல்லவன் என்றும் இவனைத் தவிர ப்ரஹ்ம ருத்ராதிகளோ வேறு எவரோ மோக்ஷத்திற்கு உபாயமாக மாட்டார்கள் என்றும் ஸ்பஷ்டமாகக் கூறுகிறார் சௌநகர் என்கிற மஹர்ஷி ஸ்ரீவிஷ்ணு தர்மத்தில். ஜகத்திற்குக் காரணமாய் இருப்பவனைத்தான் மோக்ஷம் விரும்புவர் உபாஸிக்க வேண்டும்

என்று உபநிஷத் கூறியிருப்பதால் காரணமாய் இருப்பவனை உபாஸிக்க வேண்டுவது மிகவும் அவச்யம் ஆகிறது. ஆனால் காரணமாய் இருப்பவன் யார்? என்று ஆராயும்போது படைப்பதற்கும் அழிப்பதற்கும் காரணமாயிருக்கும் ப்ரஹ்மாவிற்கும் ருத்ரனுக்கும் காரணமாய் இருப்பவன் ஸ்ரீமந்நாராயணனே ஆதலால் அவனே ஸர்வ காரணமாவான். இப்படி ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும் காரணமாய் இருக்கும் நாராயணனைத் தான் ப்ரஹ்ம ருத்ராதிகளும் தங்களுக்கு மோக்ஷம் வேண்டியிருந்தால் உபாஸிக்க வேண்டும்.

**ஆக ப்ரஹ்ம ருத்ராதிகளான தேவதைகளுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் மோக்ஷத்திற்காக உபாஸிக்கத் தக்கவன் ஸ்ரீமந் நாராயணனே ஆவான்.**

++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++++

## ஸ்ரீமந்நாராயணனின் கல்யாணகுணங்கள் :-

1. வாத்ஸல்யம்,
2. ஸ்வாமித்வம்,
3. ஸௌசில்யம்,
4. ஸௌலப்யம்,
5. ஸர்வக்ஞத்வம்,
6. ஸர்வசக்தித்வம்,
7. ஸத்ய ஸங்கல்பத்வம்,
8. பரம காருணிகத்வம்,
9. க்ருத க்ஞத்வம்,
10. ஸ்திரத்வம்,
11. பரிபூர்ணத்வம்,
12. பரமோதாரத்வம்

போன்றவைகளாகும்.

**1. வாத்ஸல்யம் :-** தோழன்போல் வந்தவனை நான் ஒருபொழுதும் கைவிடேன், அவனிடம் குற்றம் காணிலும் பெரியோர் இதைப் போற்றுவர், என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் காண்கின்றது. எனவே அவன் சரணாகதனிடம் குற்றங்காணினும் கைவிடான். ஏனெனில், இதற்குக் காரணம் வாத்ஸல்யம் - எம்பெருமானுக்கு நம்மிடம் உள்ள அன்பு. அன்புள்ளவர்கள் தாங்கள் அன்பு கொண்ட குழந்தை பக்தர் போன்றோரின் குற்றம் காண்பரோ ? எம்பெருமான் நம்பால் உள்ள அபராதங்களைக் கணிசியான் என்ற உறுதி ஏற்பட அஞ்சாது அவனை அடையவியலும்.

**2. ஸ்வாமித்வம்**:- எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தம். இஃது ஸ்வாமித்வம் தாஸத்வம் என்பது, ஸ்வாமித்வம் அவனிடம்

இருப்பதால் அவன் ஸ்வயம் ப்ரயோஜனமாய், நம்மை ரக்ஷிப்பான், என்ற மஹாவிச்வாசம் ஏற்படப் பயன்படும்.

**3. ஸௌசீல்யம்** - தன்னுயர்வைக் கணிசியாது, இழிந்தோரிடமும் கூடிக்குலவும் குணம். இதனை கறவைகள் பின் சென்று கானகம் சேர்ந்துண்ணும் அறிவொன்றுமில்லாத
ஆயர்களுடன் கூடிக்குலவிக் கண்ணன் களித்ததாலும், குகன், வானரனுடன் நட்பு கொண்டதிலிருந்தும் உணரலாம்.

**4. ஸௌலப்யம்** :- எம்பெருமான், ஸனக, ஸனந்தனாதி மாபெரும் யோகிகட்கும் விஷயமாகாத தான் மாந்தர்களனைவர்களும் ஸேவிக்கலாம் படி அவதரித்தல். இக்குணம் நாம் அச்சமின்றி அவனை அணுக உதவும். அவனை யணுக இயலாது என்ற நிராசையகலும்.

**5. ஸர்வக்ஞத்வம்** :- ஒரே ஸமயத்தில் எல்லாவற்றையும் நேரில் காணும் தன்மை. எம்பெருமான் ஒரே ஸமயத்தில் எல்லாவற்றையும் நேராகக் காணும் ஸ்வபாவம் உள்ளவன் என்று நியாயதத்வம் கூறுகின்றது. எனவே எம்பெருமான் நமது நன்மைகளையும் இடையூறுகளையும் பகைகளையும், உணர்ந்து ஆவன செய்வான்.

**6. ஸர்வசக்தித்வம்** :- அகடிதகடனாஸாமர்த்யம். (செய்ய அரியவைகளைச் செய்து முடித்தல்) மிக எளிய நாம் சரணகாதி செய்ய நம்மை ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யஸூரிகளுடன் கொண்டு சேர்க்கும் வல்லமையைப் பெற்றுள்ளான் என்ற உறுதியை நமக்கு இக்குணம் ஏற்படச் செய்யும்.

**7. ஸத்ய ஸங்கல்பத்வம்** :- எம்பெருமான், தனது ஸங்கல்பத்தைத் தானும் மீற இயலாத தன்மை. இதனால் "அஹம் த்வாஸர்வ பாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி" எம்பெருமானின் திருவாக்கில் மஹா விச்வாசம் ஏற்படும்.

**8. பரம காருணிகத்வம்** :- எப்பயனையும் கோலாது பிறர் துன்பத்தைப் போக்க வேண்டுமென்ற விருப்பம். இத்தகைய குணமிருப்பதால் பெருமாள் "நண்பனாக வந்தடைந்தவனை ஒருபொழுதும் விடேன்," என்றும் "விபீஷணனாக இருப்பினும் என் ராவணனாக இருக்கட்டும் அபயமளித்துவிட்டேன், அழைத்து வா" என்று ஸாதித்தருளினான். எனவே நமது அநாதி காலமாய்த் தொடர்ந்து வரும் அனந்த (எல்லையற்ற) அபராதங்களையும் க்ஷமித்தருள்வான் என்ற தெளிவு தோன்றும்.

**9. க்ருதக்ஞத்வம்**:- நாம் செய்யும் சிறிய செயல்களையும் மிகப் பெரும் உபகாரம் செய்ததாகக் கொண்டு அதனை மறவாதிருத்தல். இதனால் எம்பெருமான் நம்மை ஒருபொழுதும் விடான் என்றறியலாம்.

**10. ஸ்திரத்வம்** :- அடைந்தாரைக் காப்பதில் நிலை பேறுடைமை நண்பனான சுக்ரீவன் தடுத்தபோதிலும், "நான் சரணமடைந்த விபீஷணனை ஒருபொழுதும் விடேன்" என்று ஸாதித்தருளினான். எனவே எம்பெருமான் நம்மை ஒருபொழுதும் கைவிடான் என்ற உறுதியான எண்ணம் உண்டாகிறது.

**11. பரிபூரணத்வம்** :- எவ்விதக் குறைபாடுமின்றி எல்லாம் நிறைந்தவன். அவனிடம் இல்லாததே ஒன்றுமில்லை. பக்தர் அன்புடன் மிக எளிய துளஸி, பழம், தீர்த்தம் இவை போன்றவைகளை அளித்தாலும் அவைகள் உயர்ந்ததா ? தாழ்ந்ததா ? என்று கணிசியான். எனவே நாம் ஸங்கோசமின்றி எளிய பொருள்களை ஸமர்ப்பிக்கலாம் என்ற எண்ணம் ஏற்படும்.

**12. பரமோதாரத்வம்** :- நாம் அனுஷ்டிக்கும் உபாயம் மிகச் சிறியதாயினும், அதனால் பெறும் பயன் மிகப் பெரியதாக இருப்பினும் இவைகளைக் கணிசியாதே எல்லாவற்றையும் கொடுத்தும், தான் கொடுத்தது போதாது என்றிருத்தல். ததிபாண்டன் ஸ்ரீ க்ருஷ்ணனிடம் தான் மோக்ஷத்தைப் பெற்றதோடு நில்லாது ததி பாண்டத்திற்கும் (தயிர்ப்பாத்திரத்திற்கும்) மோக்ஷம் அளிக்க வேண்டிப் பெற்றான். அவனைப்போன்று நாமும் நமக்கும் நம்மையடைந்தார்க்கும் பரம புருஷார்த்தத்தை வேண்டிப் பெறலாம் என்று இக்குணத்தால் தேறுகிறது.
******************************************************************************

